RESOURCES FOR MTLs

# அதிசய வார நடவடிக்கை
# பாலர் பள்ளி முதலாம் ஆண்டு
# ‘சிவப்புப் பாண்டா’





**கண்ணோட்டம்:**

அதிசய வாரம் என்பது பிள்ளைகள் விருப்பத்துடனும் ஆர்வத்துடனும் தாமே தேர்ந்தெடுத்த ஒரு தலைப்பையொட்டி ஆழமாக அறிந்துகொள்ளும் ஒரு திட்டப்பணியாகும். அதிசய வாரத்தின்போது நடத்தப்படும் நடவடிக்கைகள், பிள்ளைகள் தங்களுக்கு எழும் வினாக்களுக்கு விடை கண்டறியவும், தெரிவுகளைச் செய்யவும், சுயமாக முடிவுகளை எடுக்கவும் வாய்ப்பு அளிக்கின்றன.

இந்நடவடிக்கை பிள்ளைகள் சிவப்புப் பாண்டாவைப்பற்றித் தெரிந்துகொள்ள உதவுகிறது.

**<u>கற்றல் குறிக்கோள்கள்:</u>**

**<u>கற்றல் குறிக்கோள்</u>** <u>1 :</u> **<u>தாய்மொழி கற்றலில் ஆர்வங்கொள்ளுதல்</u>**

1. **தாய்மொழி நடவடிக்கைகளில் விரும்புதல்**

- ✓ புத்தகங்களில் ஆர்வம் காட்டுதல் (எ-டு: புத்தகத்திலுள்ள படங்களைச் சுட்டிக்காட்டிப் பார்த்தல், கதையைப்பற்றிக் கருத்துக் கூறுதல் அல்லது கேள்விகள் கேட்டல்)
- ✓ தாய்மொழியில் நடத்தப்பட்ட கற்றல் அனுபவங்களைப்பற்றிப் பேசுதல்
- ✓ எண்ணங்களையும் தகவல்களையும் தாய்மொழியில் வெளிப்படுத்த அடையாளம் அல்லது குறியீடுகள் வரைதல், உருவாக்குதல்

**<u>கற்றல் குறிக்கோள் 2</u>** <u>:</u> **<u>அடிப்படை மொழித்திறன்களை வளர்த்தல்</u>**

1. **புரிந்துணர்வுடன் கேட்டல்**

- ✓ பேசும்போது எதிரில் இருப்பவரோடு கண் தொடர்புகொள்ளுதல்
- ✓ ஒன்று அல்லது இரண்டு படிநிலைகளைக்கொண்ட கட்டளைகளைக் கேட்டுச் செயற்படுதல்

**இந்நடவடிக்கைகளில் ஈடுபடும்போது பிள்ளைகள்,**

- சக மாணவர்களின் ஒத்துழைப்பையும் ஆசிரியரின் ஆலோசனையையும் பெறுகிறார்கள்.
- சுயமுனைப்பு, ஆராய்தல், பிரச்சினைக்குத் தீர்வு காணுதல் ஆகியவற்றின்வழி மகிழ்ச்சியான சுய கற்றல் அனுபவத்தைப் பெறுகிறார்கள்.
- தங்களின் தன்னம்பிக்கையை வளர்த்துக்கொள்கிறார்கள்.

# 1. நான் தெரிந்துகொள்ள விரும்புவது…

1.1 பிள்ளைகள் அதிசய வார நடவடிக்கைக்கான தலைப்பைப்பற்றி ஆசிரியருடன் கலந்துரையாடினார்கள்.






**பிள்ளைகள் நடவடிக்கைக்கான தலைப்பைப்பற்றி ஆசிரியருடன் கலந்துரையாடுதல்**

1.2 பிள்ளைகள் சிவப்புப் பாண்டாவைப்பற்றித் தெரிந்துகொள்ள விழைந்தார்கள்.

**ரிவர் சஃபாரியில் உள்ள விலங்குகள்**

குள்ள முதலை

இந்திய கைரால் முதலை

திருக்கைமீன்

பெரிய பாண்டா

**சிவப்புப் பாண்டா**

**சிவப்புப் பாண்டா**

இது நேப்பால் காடுகளில் வாழும். வசிக்கிறது.

இது பார்க்க நரி, ரக்கூன், பூனை போன்ற விலங்குகளைப்போல் இருக்கும்.

இது மரத்தில் வசிக்கும்.

இது மூங்கில் சாப்பிடும்.

இது குளிரான இடத்தில் இருக்கும்.

1.3 ஆசிரியர் பிள்ளைகளின் கருத்துகளையும் கேள்விகளையும் வலைப்பின்னலில் பதிவு செய்தார்.





## கேள்விகள்

1. சிவப்புப் பாண்டா எங்கே வசிக்கும்?
2. சிவப்புப் பாண்டா என்ன சாப்பிடும்?
3. சிவப்புப் பாண்டா பார்ப்பதற்கு எப்படி இருக்கும்?
4. உலகில் எத்தனைச் சிவப்புப் பாண்டாக்கள் உள்ளன?

# 2. நான் கண்டுபிடித்தவை…

2.1 பிள்ளைகள் ஒளிக்காட்சி வழியாகச் சிவப்புப் பாண்டாவைப்பற்றி அறிந்துகொண்டார்கள்.




**பிள்ளைகள் ஒளிக்காட்சியைப்ப் பார்த்தல்**

2.2 பிள்ளைகள் ஆசிரியருடன் ரிவர் சஃபாரிக்குக் கல்விப் பயணம் சென்றனர். அவர்களது ‘ரிவர் சஃபாரி’ பயணம் உற்சாகமாகத் தொடங்கியது.

## எங்கள் ‘ரிவர் சஃபாரி’









2.3 பிள்ளைகள் பயணத்தை ரிவர் சஃபாரியின் ஆறுகளிலிருந்து தொடங்கினார்கள்.




2.4 பிள்ளைகள் தங்கள் பயணத்தைச் சிவப்புப் பாண்டாவின் காட்சிக்கூடத்தில் இனிதே முடித்தார்கள்.



2.5 பிள்ளைகள் சிவப்புப் பாண்டாவைப் பராமரிப்பவரிடம் கேள்விகள் கேட்டார்கள்.

**கேள்வி** :சிவப்புப் பாண்டா எங்கே வசிக்கிறது?
**பதில் :** சிவப்புப் பாண்டா நேப்பாலிலுள்ள இமயமலைக் காடுகளில் காணப்படும்.

**கேள்வி** :சிவப்புப் பாண்டா என்ன சாப்பிடும்?
**பதில் :** சிவப்புப் பாண்டா மூங்கில், பூச்சிகள், எலிகள் போன்றவற்றைச் சாப்பிடும்.









**கேள்வி** :சிவப்புப் பாண்டா பார்ப்பதற்கு எப்படி இருக்கும்?
**பதில் :** சிவப்புப் பாண்டா நரி, ரக்கூனைப்போலத் தோற்றமளிக்கும்.

**கேள்வி** :உலகில் எத்தனைச் சிவப்புப் பாண்டாக்கள் உள்ளன?
**பதில் :** உலகில் இப்போது சுமார் பத்தாயிரம் சிவப்புப் பாண்டாக்கள் உள்ளன.

# 3. நான் தெரிந்துகொண்டவை...

3.1 பிள்ளைகள் ரிவர் சஃபாரியில் பார்த்த சிவப்புப் பாண்டாவை நினைவுகூர்ந்து கொடுக்கப்பட்ட படத்தில் வண்ணத்தாள்களை ஒட்டினார்கள். இந்த நடவடிக்கையின்மூலம் பிள்ளைகள் சிவப்பு, ஆரஞ்சு, கறுப்பு, பழுப்பு, வெள்ளை ஆகிய நிறங்களின் பெயர்களைத் தெரிந்துகொண்டார்கள்.









3.2 பிள்ளைகள் சிவப்புப் பாண்டாவின் படத்தை அட்டைக் குழாயில் ஒட்டி, எழுதுபொருள் வைப்பதற்காக ஒரு பொருளை உருவாக்கினார்கள். இந்நடவடிக்கையில் பிள்ளைகள் ஈடுபட்டபோது, தங்கள் குழு உறுப்பினர்களுடன் சிவப்புப் பாண்டாவின் உடல் உறுப்புகளைப்பற்றிப் பேசினார்கள். இது பிள்ளைகளின் சொல்வளப்பெருக்கத்திற்கு வழிவகுத்தது.






3.3 கொடுக்கப்பட்ட கையேட்டில் உள்ள படங்களுக்குப் பிள்ளைகள் வண்ணம் தீட்டினார்கள்; கேள்விகளுக்குப் பதிலளித்தார்கள். இதன்வழிப் பிள்ளைகள் சிவப்புப் பண்டாவைப்பற்றித் தாங்கள் கற்றுக் கொண்டவற்றை நினைவுகூர்ந்தார்கள்.




# தொடர் நடவடிக்கை:

- பிள்ளைகள் சிவப்புப் பாண்டா பொம்மைகளைத் தங்கள் பெற்றோர்களுடன் சேர்ந்து செய்தார்கள். இந்த நடவடிக்கையின்போது பிள்ளைகள் ரிவர் சஃபாரிக்குக் கல்விப் பயணம் சென்றதைப்பற்றிப் பெற்றோர்களுடன் தமிழில் கலந்துரையாடினார்கள். (இந்த அனுபவத்தைப்பற்றிப் பெற்றோர் பலர் ஆசிரியருடன் பகிர்ந்துகொண்டார்கள்.)



- பிள்ளைகள் தங்கள் பெற்றோருடன் சேர்ந்து செய்த சிவப்புப் பாண்டா பொம்மையை வகுப்பினரிடம் காட்டி, அதைப்பற்றித் தன்னம்பிக்கையுடன் பேசினார்கள்.



நான் என் அம்மாவுடன் செய்தேன்.



என் பெற்றோர் எனக்கு உதவினர்.



நான் என் அம்மாவுடன் செய்தேன். என் அப்பாவும் உதவினார்.



இந்த வேலையை நான் என் அக்காவுடன் சேர்ந்து செய்தேன்.

அதிசய வார நடவடிக்களையொட்டிக் கலந்துரையாடும்போது பிள்ளைகள் பல புதிய சொற்களைக் கற்றுக்கொள்கிறார்கள். மேலும், ஆராய்தல், சுயமுனைப்புடன் பிரச்சினைக்குத் தீர்வுகாணுதல் ஆகியவற்றின்வழிப் பிள்ளைகளின் சுய கற்றல் அனுபவங்கள் மகிழ்ச்சிமிக்கதாக அமைகின்றன.

